செ.வெ.எண்: 39 நாள்: 16.01.2017

**விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் அம்மா வார சந்தைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் அம்மா வார சந்தைகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் 15.01.2017 ஞாயிற்று அன்று துவக்கி வைத்து விற்பனையினை பார்வையிட்டு கூறியதாவது:

தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழக அரசு பொதுமக்கள் தங்களுக்கு தேவையான காய்கறிகளை நீண்ட தூரம் சென்று வாங்கி வருவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் ஊராட்சிகளில் அம்மா வாரசந்தைகளை துவக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, பாக்குடி, ஆலங்குடி ஊராட்சி, ஆலங்குடி மற்றும் நீர்பழனி ஊராட்சி, நீர்பழனி ஆகிய கிராமங்களில் அம்மா வாரச்சந்தை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அம்மா வாரச்சந்தைகள் ஒவ்வொரு வாரமும் பாக்குடியில் புதன்கிழமையும், ஆலங்குடியில் வெள்ளிகிழமையும் மற்றும் நீர்பழனியில் ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து செயல்படும். இதில் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான தக்காளி, கத்தரிக்காய், உருளைகிழங்கு, பீன்ஸ், வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் மற்றும் பிற பொருட்களை பெறலாம். இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் அலைச்சல் தவிர்க்கப்பட்டு தங்களுக்கு தேவையான காய்கறிகளை தங்களது பகுதிகளிலேயே பெற்று பயன்பெற முடியும். எனவே தமிழக அரசின் இத்தகைய மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார வளாச்சி அலுவலர் திரு. சுப்பிரமணியன், வட்டாட்சியர்கள் திரு.தமிழ்மணி (இலுப்பூர்), திரு.சதீஸ் (விராலிமலை), முன்னாள் ஒன்றியக் குழுத் துணை தலைவர் திரு.திருமூர்த்தி, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**